# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் - 9

## அலகு – 6

# யார் சிறந்தவர்?

MR.KULANTHAIVEL SUTHAKARAN (BA,DIP.IN.EDU)

BT/KK/VAMMIVADDAVAN VIDYALAYAM, BATTICALOA.

# யார் சிறந்தவர்?

- இவ்வுரையாடலின் ஆசிரியர் ராணி சிதம்பரநாதன் ஆவார்.
- இவரது “வான்துளிகள்” என்ற நூலிலே இவ்வுரையாடல் இடம்பெற்றுள்ளது.
- ரோஜா, கனகாம்பரம், மல்லிகை போன்ற மலர்களுக்கிடையே யார் சிறந்தவர்? என்ற உரையாடல் இடம்பெறுகின்றது.





- ஒவ்வொரு மனிதனிடமும் ஒவ்வொரு தனித்துவமான பண்புகள் காணப்படுகின்றன. எனினும் எம்மில் பலர் தம்மை ஏனையவருடன் ஒப்பிட்டு நோக்கி தற்பெருமை பேசுவதிலேயே காலத்தைக் கழிக்கின்றனர், என்பதனை மலர்கள் வாயிலாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.





- இவ்வுரையாடலினூடாக எல்லோரையும் மதித்துப் பழகுதல், ஒவ்வொருவருக்கும் தனிப்பண்புகள் காணப்படுகின்றன, யாரும் ஒருவரை விட ஒருவர் குறைந்தவர் அல்லர், உயர்வு தாழ்வு காண்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை, தற்பெருமை பேசுதல் கூடாது, ஆணவம் எம்மை அழித்து விடும் போன்ற பல்வேறு கருத்துக்கள் வெளிப்படுகின்றன.





- ரோஜாவின் கர்வத்துக்குக் காரணம் தான், செந்நிற அழகி என்பதாலாகும்.

- மல்லிகை பொறுமை காப்பது, வாசனை நிறைந்தது, தூய்மையானது போன்ற பண்புகளைக் கொண்ட ஒரு மலராகும்.







- கனகாம்பரம் உண்மை கூறுவது, அடுத்தவரை மதிப்பது, உறவைப் பேணக் கூடிய ஒரு மலராகும்.

- இவ்வுரையாடலுக்கு ‘‘பொறுத்தார் பூமியாள்வார் பொங்கினார் காடாள்வார்’’, ‘‘அகத்தின் அழகு முகத்தில் தெரியும்’’ போன்ற பழமொழிகள் பொருத்தமானவை.



# தன்வினை பிறவினை

- **தன்வினை**
- வினை நிகழ்வொன்றின் போது வினையின் பயன் வினையை நிகழ்த்துகின்ற கருத்தாவை அல்லது எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை எனப்படும்.
- உதாரணம் - தம்பி சோறு உண்டான்.

  ராஜா மழையில் நனைந்தான்.
- **பிறவினை**
- வினை நிகழ்வொன்றின் போது வினையை நிகழ்த்துகின்ற கருத்தாவை அன்றி பிறிதொருவர் அவ்வினையின் பயனைப் பெற்றுக் கொள்வாராயின் அது பிறவினை எனப்படும்.
- உதாரணம் - அம்மா சோறு ஊட்டினாள்.

  ஆசிரியர் பாடம் கற்பித்தார்.

# செய்வினை செயப்பாட்டுவினை

- **செய்வினை**
- ஒரு வாக்கியத்தில் எழுவாயைக் கருத்தாவாகக் கொள்ளுகின்ற வினை செய்வினை எனப்படும்.
- உதாரணம் - உமறுப்புலவர் சீறாப்புராணத்தைப் பாடினார்.

  பசு புல் மேய்ந்தது.

- **செயப்பாட்டுவினை**
- ஒரு வாக்கியத்தில் செயப்படுபொருளை எழுவாயாகக் கொள்ளுகின்ற வினைகள் செயப்பாட்டு வினை எனப்படும்.
- உதாரணம் - சீறாப்புராணம் உமறுப்புலவரால் பாடப்பட்டது.

  புல் பசுவால் மேயப்பட்டது.

# அழைப்பிதழ்

- நிகழ்வுகள், விழாக்கள், போன்றவற்றுக்கு விருந்தினர், உறவினர்கள், நண்பர்களை அழைப்பதற்காக உருவாக்கப்பட்டதே அழைப்பிதழாகும்.
- அழைப்பிதழ் திருமண அழைப்பிதழ், பூப்புனிதநீராட்டுவிழா, பிறந்நாள் அழைப்பிதழ், பரிசளிப்பு விழா அழைப்பிதழ். விளையாட்டு விழா அழைப்பிதழ் எனப் பலவகையாகக் காணப்படுகின்றன.
- அழைப்பிதழானது தலைப்பு, விளிப்பு, இடம், திகதி, நேரம், விழாவில் பங்குபெறுபவர்கள் விபரம், நிகழ்வுகள், ஏற்பாட்டாளர் விபரம் போன்ற உறுப்புக்களைக் கொண்டு காணப்படும்.
- அழைப்பிதழ் எழுதும் போது சுருக்கமாகவும், நேர்த்தியாகவும், தெளிவாகவும் எழுதப்படல் வேண்டும்.

- **பின்வரும் வினாக்களுக்குரிய மிகச்சரியான விடையயைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1) “யார் சிறந்தவர்?” என்ற உரையாடலின் ஆசிரியர் யார்?

1. டாக்டர்.எம்.எஸ்.உதயமூர்த்தி
2. யோ.பெனடிக்றபாலன்
3. அன்பு முகைதீன்
4. ராணி சிதம்பரநாதன்

2) “யார் சிறந்தவர்?” என்ற உரைச்சித்திரம் இடம்பெற்ற நூல் எது?

1. தமிழ்மரபு
2. வான்துளிகள்
3. நெஞ்சே அஞ்சாதே நீ
4. புதுப்புனல்

3) “ரோஜா மலரே ராஜகுமாரி..” இங்கு ராஜகுமாரி என்பதன் எதிர்பாற் சொல்

1. ராஜா
2. ராஜன்
3. ராஜகுமாரன்
4. ராஜராஜன்

4) பின்வருவனவற்றுள் அழைப்பிதழ் ஒன்றில் இடம்பெறாத விடயம்,

1. தலைப்பு
2. விளிப்பு
3. அழைப்பவர் முகவரி
4. ஒப்பம்

5) சரி! சரி! போதும் உன் உபதேசம். இதில் சரி சரி என்பது,

1. இரட்டைக்கிளவி
2. அடுக்குத்தொடர்
3. இணைமொழி
4. அடுக்கிடுக்குத்தொடர்

**(10 புள்ளிகள்)**

- **பின்வரும் செய்வினை வாக்கியங்களை செயப்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. தம்பி பாடம் படித்தான்.

   ……………………………………………………………………

2. விபுலானந்தர் யாழ் நூலை எழுதினார்.

   ……………………………………………………………………..

3. அரசாங்கம் தடுப்பூசி வழங்கியது.

   ……………………………………………………………………..

4. பாரதியார் கண்ணன்பாட்டை எழுதினார்.

   ……………………………………………………………………

5. யானை பாகனைக் கொன்றது.

   ………………………………………………………………………………

**(15 புள்ளிகள்)**

- பின்வரும் தன்வினைகளை பிறவினைகளாக மாற்றி எழுதுக.

1. உண்டான் ………………………………………………..

2. கற்றான் …………………………………………………...

3. நடந்தேன் ……………………………………………….

4. உருண்டான் …………………………………………….

5. எழுதினான் ……………………………………………….

(15 புள்ளிகள்)

- பின்வரும் கூற்றுக்கள் யாரால்? யாருக்கு? கூறப்பட்டது என்பதை எழுதுக.

1. "இங்கே பார்! உன் மிடுக்கான பேச்சை உன்னிடமே வைத்துக்கொள்."

   யாரால் ………….. யாருக்கு ……………..

2. "சரி சரி போதும் உன் உபதேசம். மேலும் பேசி என்னுடைய நேரத்தை வீணாக்க விரும்பவில்லை."

   யாரால் ………….. யாருக்கு ……………..

3. "..இந்த மல்லிகை மொட்டுக்களைப் பறித்து அழகான இரு மாலைகள் தொடுத்து வை.."

   யாரால் ………….. யாருக்கு ……………..

4. "ஏன் என்னை முறைத்து முறைத்துப் பார்க்கிறாய். என் அழகை நீ இரசிக்கின்றாயா? "

   யாரால் ………….. யாருக்கு ……………..

5. "இது நாளை உதிர்ந்துவிடும்…."

   யாரால் ………….. யாருக்கு …………….. **(20 புள்ளிகள்)**

- பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. இவ்வுரையாடலில் இடம்பெறும் பாத்திரங்களைக் குறிப்பிடுக.
2. இவ்வுரையாடலின் மூலம் ஆசிரியர் வெளிப்படுத்த விழையும் பிரதான விடயம் யாது?
3. ரோஜாவின் கர்வத்திற்கான காரணம் யாது?
4. கனகாம்பரம் ‘அழகு’ என்பதற்கு கொடுக்கும் விளக்கம் யாது?
5. “நற்குணம், மென்மை ஆகிய பண்பு உடையவர்கள் போற்றப்படுவார்கள்” என்பதனை இவ்வுரைச்சித்திரம் எவ்வாறு வெளிப்படுத்துகின்றது?

6. ரோஜாவினை கவிஞர்கள் விரும்புவதற்கான காரணம் யாது?

7. ஜானகியம்மாள் ரமணியிடம் கூறிய வேலை என்ன?

8. ரோஜாவினைப் பற்றி இவ்வுரையாடலில் கூறப்பட்டுள்ள சினிமாப் பாடலைக் குறிப்பிடுக.

9. அழைப்பிதழ் ஒன்றில் இடம்பெற வேண்டிய விடயங்களைக் குறிப்பிடுக.

10. பின்வரும் அரும்பதங்களின் பொருளைத் தருக.

1. களங்கம் ……………………………………………………

2. வேதாந்தம் …...……………………………………………..

3. தணித்தல் …………………………………………………

4. மென்மை ……………………………………………………

5. தலைக்கனம் ……...…………………………………….

6. நந்தவனம் …………………………………………….

**(40 புள்ளிகள்)**

# விடைகள்

## 1. பல்தேர்வு வினாக்கள்

1. ராணி சிதம்பரநாதன்
2. வான்துளிகள்
3. இராஜகுமாரன்
4. ஒப்பம்
5. அடுக்குத்தொடர்

## 2. செயப்பாட்டு வினை

1. பாடம் தம்பியால் படிக்கப்பட்டது.
2. யாழ்நூல் விபுலானந்தரால் எழுதப்பட்டது.
3. தடுப்பூசி அரசாங்கத்தால் வழங்கப்பட்டது.
4. கண்ணன்பாட்டு பாரதியாரால் எழுதப்பட்டது.
5. பாகன் யானையால் கொல்லப்பட்டான்.

# விடைகள்

## 3. பிறவினைகளாக மாற்றுதல்

1. ஊட்டினான்
2. கற்பித்தான்
3. நடத்தினேன்
4. உருட்டினான்
5. எழுதுவித்தான்

## 4. சந்தர்ப்பம் கூறுதல்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | யாரால் | - | கனகாம்பரத்தால் | யாருக்கு | – | ரோஜாவிற்கு |
| 2. | யாரால் | - | ரோஜாவால் | யாருக்கு | – | கனகாம்பரத்திற்கு |
| 3. | யாரால் | - | ஜானகியம்மாளால் | யாருக்கு | – | ரமணிக்கு |
| 4. | யாரால் | - | ரோஜாவால் | யாருக்கு | – | மல்லிகைக்கு |
| 5. | யாரால் | - | ரமணியால் | யாருக்கு | – | தனக்குத்தானே |

# விடைகள்

## 5. சுருக்கமான விடைகள்

1. மலர்களாக – ரோஜா, மல்லிகை, கனகாம்பரம்

மனிதர்களாக – ஜானகியம்மாள், ரமணி

2. ஒவ்வொரு மனிதனிடமும் ஒவ்வொரு தனித்துவமான பண்புகள் காணப்படுகின்றன. எனினும் எம்மில் பலர் தம்மை ஏனையவருடன் ஒப்பிட்டு நோக்கி தற்பெருமை பேசுவதிலேயே காலத்தைக் கழிக்கின்றனர். என்பதனை மலர்கள் வாயிலாக வெளிப்படுத்தி இருக்கின்றார்.

3. செந்நிறம் கொண்ட அழகி என்பதாலும், துவாரகையின் இராஜகுமாரி என்பதாலும் ரோஜா கர்வத்துடன் விளங்கினாள்.

4. புற அழகைவிட அக அழகே உண்மையான அழகு என கனகாம்பரம் விளக்கமளித்தது.

5. தற்பெருமையுடன் விளங்கிய ரோஜா உதிர்ந்துவிட நற்குணமும் மென்மையும் கொண்ட மல்லிகையானது ரமணி, ஜானகியம்மாள் போன்றவர்களின் கூந்தலை அலங்கரித்ததுடன் தனக்கேயுரிய அழகு, தூய்மையாகிய பண்புகளுடன் மென்மையாகச் சிரித்தாள் என்பதனூடாக வெளிப்படுத்துகின்றார்.

# விடைகள்

5. சுருக்கமான விடைகள்

6. செந்நிறம் கொண்டிருத்தல், மிருதுவான மேனியைக் கொண்டிருத்தல், நறுமணமுடையதாகக் காணப்படுதல்.

7. மல்லிகை மொட்டுக்களைப் பறித்து அழகான இரு மாலைகள் தொடுத்து வைக்குமாறு கூறினாள்.

8. “ரோஜாப்பூ சின்ன ரோஜாப்பூ
உன்பேரைச் சொல்லும் ரோஜாப்பூ..” என்ற பாடல் ஆகும்.

9. தலைப்பு, விளிப்பு, இடம், திகதி, நேரம், அழைப்பவர் விபரம்

## 10. அரும்பதங்களின் பொருள்

1. களங்கம் - குற்றம்
2. வேதாந்தம் - தத்துவங்களில் ஒன்று
3. தணித்தல் - குளிரச் செய்தல்
4. மென்மை - மிருதுவான
5. தலைக்கனம் - செருக்கு
6. நந்தவனம் - பூஞ்சோலை